Newspaper: Business Standard
Language: English
Edition: All editions
Date of Publication: July 11, 2026

Strong volumes lead to Page Industries' upgrade

Innerwear major expected to continue strong show into FY27

RAM PRASAD SAHU
Mumbai, 10 July

Robust demand, price hikes, and premiumisation are likely to rub off on volume growth and realisations for innerwear major Page Industries. Though volume growth was 4 per cent in FY26, Page ended the financial year (Q4FY26) with a volume uptick of 10.4 per cent.

Analysts expect the company to continue the strong show into FY27. Though prospects for the current year have improved, valuations are on the higher side. The stock is up 11 per cent over the past three months. Most brokerages hint at a strong volume/realisation trajectory for FY27. Kotak PCG Research believes that gains for the company in the current financial year will be led by faster growth in the women's and athleisure categories.

Further realisations are expected to improve led by price hikes and improving mix. Double-digit volume growth, coupled with realisation improvement, is expected to drive mid-teens revenue growth in FY27.

The brokerage has increased its revenue estimates for FY27-29 by 5-7 per cent and earnings per share projections by 2-4 per cent.

Though it is bullish on the outlook, the brokerage has a sell rating as Page Industries is trading at 45 times its FY28 earnings estimates which they consider to be on the expensive side.

It has, however, changed its estimates given higher revenue growth forecasts with its target price increasing to ₹37,000 from ₹34,500 earlier.

What should help the company improve its growth and market share is the consolidation in the market, resulting in lower competitive pressures.

Several brands, according to JM Financial Research, either exited general trade, reduced geographic presence or cut back discounting and marketing spends amid profitability pressures.

This created incremental headroom for category leaders like Page to gain share, led by stronger supply chain, distribution network and brand investments. The company is also expected to see traction in the e-commerce segment which now contributes 15 per cent of revenue.

Goldman Sachs Research, too, has upgraded the target price to ₹48,000 from ₹45,000. This is on the back of price hike taken in May and expectation that volume growth momentum is likely to sustain, going ahead.

Ahead of benchmark



Sources: Bloomberg, BSE

The brokerage points out that recovery in volume growth is led by structural factors and outperformance by the exclusive branded outlets compared to multi-brand outlets and distributor channels. This bodes well for the long term.

In addition to volume growth, the Street will also focus on the margins. The pressure on the raw material could recede in the near term as cotton prices have come down from $85 to $76 per pound. During Q4, inflationary pressures in key input costs, particularly cotton and other raw materials, had remained elevated.

The company, however, mitigated the impact through strategic sourcing initiatives, supply chain optimisation measures, operational efficiency improvements, and selective pricing interventions.

Operating profit margins came in at 20.8 per cent and were down 62 basis points (bps) year-on-year (Y-o-Y) and 214 bps on a sequential basis.

In spite of plans to increase investments in technology and marketing, the company reiterated its long-term operating profit margin guidance of 19-21 per cent.

YOUR MONEY

Steps to avoid costly early exits from insurance policy

SANJAY KUMAR SINGH
& KARTHIK JEROME

Life insurers are paying out almost as much to customers who abandon their policies as to those who see them through. According to the Reserve Bank of India's Financial Stability Report, surrenders and withdrawals accounted for 38.3 per cent of payouts in 2025-26, against 36.9 per cent for maturity claims. The narrow gap points to premature exits becoming a widespread phenomenon.

Why policyholders exit early

Most early exits are from traditional policies. "Policyholders sometimes conclude after purchase that these policies offer little value," says Renu Maheshwari, Sebi-registered investment adviser, co-founder and principal advisor, Finscholarz Wealth Managers.

Awareness of mis-selling sometimes prompts buyers to drop unsuitable policies. Agents may present a multi-year premium policy as a single-premium product. "A buyer may be told that they need to pay a large premium only once. When asked to pay the same amount again the following year, they may surrender the policy," says Deepesh Raghaw, Sebi-registered investment advisor, PersonalFinancePlan.

Buyers may also exit when a product, particularly a Ulip, performs poorly.

Early exits are costly

A traditional policy may yield nothing if it lapses before two premiums have been paid. "The buyer may receive only a portion of the premiums paid even after holding a traditional policy for five or seven years," says Raghaw.

Ulips have a five-year lock-in but usually offer a less painful exit. "If a policyholder exits a Ulip before the lock-in ends, the proceeds are transferred to a low-return fund (the discontinued policy fund, which pays a minimum guaranteed return of 4 per cent per annum). The proceeds can be redeemed after five years," says Maheshwari.

Match product to needs

Understanding a product and assessing its suitability improve the chances of staying invested. Use life insurance mainly to cover risk, not to seek returns. Term insurance is the main product most people need, especially when dependants rely on the buyer's income.

Those seeking attractive long-term returns should avoid traditional plans. They may offer inadequate protection compared with term insurance. They invest primarily in fixed income, which locks buyers into low returns for years. Ulips permit tax-free switching between debt and equity. However, investors cannot withdraw during the first five years, even if the funds perform poorly. Buyers who do not need life cover must still bear mortality charges. These charges can absorb a substantial part of an elderly buyer's premium.

Deferred annuities are generally unsuitable for rapid, long-term corpus growth. Immediate annuities can provide lifelong retirement income and may be useful when bought during a high-interest-rate period.

Check premium affordability

Buyers should ensure that premiums remain affordable throughout the tenure by comparing them with their regular cash flows. Avoid rushed purchases during the tax-saving season. "Do not purchase a policy merely because of tax benefits or a persuasive sales pitch," says Aditya Mall, appointed actuary, Generali Central Life Insurance.

Policyholders facing affordability issues should get a cost-benefit analysis done. "The analysis should compare continuing the policy with reinvesting the surrender value and future premiums," says Maheshwari.

Verify premium structure

Confirm whether the policy requires a single premium or recurring payments. Higher commissions on regular-premium plans may encourage mis-selling. The policy document states the premium structure on its first couple of pages.

Understand liquidity restrictions

Be aware of a product's lock-in. "Maintain a separate emergency fund for short-term liquidity needs," says Mall. Do not assume that money in an insurance product will be accessible whenever required.

Protect yourself from mis-selling

Seek professional advice if you cannot evaluate a product independently. Prefer a fee-charging adviser to one who earns product commissions.

"Do not purchase a policy under pressure or merely to meet a tax deadline," says Mall.

Utilise free-look period properly

- Use free-look period to confirm that the policy suits your financial needs and long-term goals
- Review the benefits and exclusions
- Understand premium commitments, tenure, surrender provisions
- Cancel within the free-look period if policy does not meet your requirements

EPF withdrawal terms relaxed: What to know

The Employees' Provident Fund (EPF) Scheme, 2026, simplifies withdrawal rules but does not allow unrestricted access to retirement savings. The new framework reduces multiple withdrawal categories to three broad heads and aims to make claims easier while protecting members' retirement corpus.

Members can continue to withdraw EPF savings for eligible purposes such as medical treatment, education, marriage and housing, subject to prescribed conditions. In many cases, full withdrawals of the eligible balance are permitted, although members are generally required to retain at least 25 per cent of their total contributions in the EPF account.

Key changes

Three broad categories: Essential needs, housing needs and "special circumstances" replace multiple withdrawal categories.

Simpler claims: The application process has been streamlined with minimal documentation in many cases.

Greater flexibility: Multiple withdrawals are allowed, depending on eligibility and available balance.

Retirement safeguard: Members generally need to maintain at least 25 per cent of total contributions in their EPF account.

Longer wait for final settlement: Employees leaving a job before retirement must now generally be unemployed for 12 months, instead of two months earlier, before becoming eligible for premature final settlement.

Read full report here: mybs.in/2g7fYaH

COMPILED BY AMIT KUMAR

Newspaper: Hindu Tamizh Thisai
Language: Tamil
Edition: Chennai
Date of Publication: July 11, 2026

சென்னை பட்டாபிராமில் இருந்து கிண்டி வரை இயக்கப்படும் எண் F70 வழித்தடப் பேருந்து சுவரப்பாளையம், ஆவடி, திருமுல்லைவாயல், அம்பத்தூர், அண்ணா நகர், திருமங்கலம், கோயம்பேடு, வடபழனி, அசோக் நகர், கே.கே.நகர் வழியாகச் செல்கிறது.

திருவான்மியூரில் இருந்து ஆவடி வரை செல்லும் A47 வழித்தடப் பேருந்து அடையாறு, சின்னமலை, சைதாப்பேட்டை, தியாகராய நகர், காமராஜர் இல்லம், வள்ளுவர் கோட்டம், நுங்கம்பாக்கம், அண்ணாநகர் மேற்கு, அம்பத்தூர் வழியாக இயக்கப்படுகிறது.

அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் குறைபாடுகளுக்கு தீர்வுகாண

304 சிறப்பு அதிகாரிகளை நியமிக்க வேண்டும்

லஞ்சப் புகார்கள் குறித்து நடவடிக்கை எடுக்கவும் சுகாதாரத் துறை உத்தரவு

சென்னை

தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளில் நிலவும் குறைபாடுகளுக்கு தீர்வு காணும் வகையில் 304 சிறப்பு அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று சுகாதாரத் துறை உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக அனைத்து இயக்குநர்களுக்கும் சுகாதாரத் துறை சார்பில் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கை:

தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளில் நிலவும் குறைபாடுகளுக்கு தீர்வு காணும் வகையில் 304 சிறப்பு அதிகாரிகளை நியமிக்க வேண்டும். சிறப்பு அதிகாரிகள் மூலம் மருத்துவமனைகள் அளவிலான குறைகளுக்கு தீர்வு காண வேண்டும். அனைத்து மாவட்ட ஆட்சியர்களும், தங்களது எல்லைக்கு உட்பட்ட மாவட்ட மருத்துவமனைகளில் உள்ள குறைபாடுகளை ஆய்வு செய்ய வேண்டும். அதை, மாவட்ட சுகாதார அதிகாரிகள், இணை இயக்குநர்கள், மருத்துவக் கல்லூரி டீன்கள் மூலம் உடனடியாக சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். குறைகளைச் சரி செய்வதற்கு முன்னரும், பின்னரும் எடுக்கப்பட்ட புகைப்படங்களுடன் கூடிய விரிவான அறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும். மருத்துவமனைகளில் நிலவும் சுகாதார சீர்கேடு, குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் குறைபாடு, பாதுகாப்பு மற்றும் மருத்துவ உபகரணங்கள் தட்டுப்பாடுகளை கண்காணித்து, அதன் பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சென்னை அண்ணா சாலை அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையின் இதயவியல் துறையில் முதுநிலை பட்டப் படிப்பு இல்லாததால், தற்போதைய நிலையில் வெறும் 4 மருத்துவர்கள் மட்டுமே பணியாற்றுகின்றனர். தினமும் 500-க்கும் மேற்பட்ட இதய நோயாளிகள் சிகிச்சை பெறும் இந்த மருத்துவமனையில், 133 தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகள் இருந்தும், 150 செவிலியர் பணியிடங்கள் மட்டுமே உள்ளன. இதனால், செவிலியர் பணியிடங்களை அதிகரிக்குமாறு கோரிக்கை எழுந்துள்ளது. எழும்பூர் தாய் - சேய் நல மருத்துவமனையில் தனியார் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட வார்டு ஊழியர்கள், பாதுகாவலர்கள் முறையாக பயிற்சி பெறவில்லை என்றும், சிலர் மாலை நேரங்களில் வளாகத்துக்கு உள்ளேயே மது, போதைப் பொருள் பயன்படுத்துவதாகவும் புகார் வந்தது. அதேபோல, மகப்பேறு வார்டுகளில் நீண்ட காலமாகப் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்கள் சிலர் நோயாளிகளிடம் லஞ்சம் வாங்குவதும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் போதிய உபகரணங்கள் இல்லாததால், நாள்தோறும் 3 முதல் 4 நோயாளிகளுக்கு மட்டுமே எம்ஆர்ஐ ஸ்கேன் செய்யப்படுகிறது. அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் இதர மருத்துவமனைகளுக்கு அனுப்பப்படுகின்றனர். நோயாளிகளிடமும், உயிரிழந்தவர்களின் உறவினர்களிடமும் தூய்மைப் பணியாளர்கள், பாதுகாப்பு ஊழியர்கள், உடற்கூறாய்வு ஊழியர்கள் என பலரும் பணம் பறிப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அதேபோல, ராயப்பேட்டை அரசு மருத்துவமனை, ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் இத்தகைய சூழல் நிலவுகிறது. வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனை வளாகத்துக்குள் எலிகள், நாய்கள், பாம்புகள் நடமாடுவதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. அரசு மருத்துவமனைகளில் நிலவும் இந்த பிரச்சினைகளை தடுக்கவும், நோயாளிகளுக்குத் தரமான சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்யவும் சிறப்பு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அரசியல், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.
மின்னஞ்சல் முகவரி: press.release@hindutamil.co.in

உலமாக்கள் மானியம் பெற கால அவகாசம் நீட்டிப்பு

சென்னை

சென்னை மாவட்டத்தைச் சார்ந்த உலமாக்கள் இரு சக்கர வாகனம் வாங்குவதற்கு மானியம் பெற கால அவகாசம் ஜூலை 15-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் எஸ்.மாலதி ஹெலன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழக அரசின் சார்பில் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவுபெற்ற 18 முதல் 60 வயதுக்கு உட்பட்ட உலமாக்களுக்கு புதிய இரு சக்கர வாகனம் வாங்குவதற்கு மானியத் தொகையாக ரூ.50 ஆயிரம் வழங்கப்படும் என அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதையொட்டி தமிழகத்தில் உள்ள பள்ளிவாசல்களில் பணியாற்றும் பேஷ்இமாம்கள், ஆலிம்கள், அரபி ஆசிரியர்கள் உள்ளிட்ட உலமாக்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன.

ஜூலை 15-ம் தேதி வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. சென்னையைச் சேர்ந்த உலமாக்கள் இருசக்கர வாகனத்துக்கான மானியம் பெறுவதற்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரிடம் படிவத்தைப் பெற்று, உரிய ஆவணங்களுடன் ஜூலை 15-ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பத்துக்கு ஒப்புதல் பெற்ற பின்னரே பயனாளிகள் இருசக்கர வாகனம் வாங்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிர்வாகத் தோல்வியால் நெரிசல்: தவாக வேல்முருகன் விமர்சனம்

சென்னை

தவாக தலைவர் தி.வேல்முருகன் வெளியிட்ட அறிக்கை:

மனிதன் தன் வாழ்நாளில் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக செலவிட வேண்டிய பொன்னான நேரங்கள், இன்றைக்கு சென்னையில் போக்குவரத்து நெரிசல்களுக்கு மத்தியில் கரைந்து கொண்டிருக்கின்றன. ஆம்புலன்ஸ் வாகனங்கள் கூட சிக்னல்களில் காத்துக் கிடக்கின்றன. இது முழுக்க முழுக்க நிர்வாக திட்டமிடலின் படுதோல்வியாகும். கோயம்பேட்டில் இருந்து கிளாம்பாக்கத்துக்கு பேருந்து நிலையத்தை மாற்றினால், சென்னையில் நெரிசல் குறையும் என்றனர்; எங்கே அந்த மாற்றம் நிகழ்ந்தது?

இதற்கிடையே மெட்ரோ பணிகள், பாதாள சாக்கடை பணிகள் போன்றவை எவ்வித மாற்றுப்பாதை திட்டமிடலும் இன்றி மக்களின் பொறுமையை சோதிக்கின்றன. புதிய தொழிற்சாலைகள், பன்னாட்டு நிறுவனங்களின் அலுவலகங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் சென்னையில் திறக்கப்படும்போது ஆயிரக்கணக்கான வாகனங்களும், லட்சக்கணக்கான மக்களும் இந்த நகரின் சாலைகளில்தான் வந்திறங்குகிறார்கள்.

சென்னையின் சாலைகளை அகலப்படுத்துவதால் மட்டும் இங்குள்ள பிரச்சினை தீராது. சென்னையில் ஆமை வேகத்தில் நடக்கும் மெட்ரோ மற்றும் இதர உள்கட்டமைப்பு பணிகளை உரிய மாற்றுப்பாதைகளுடன், போர்க்கால அடிப்படையில் விரைந்து முடிக்க வேண்டும். சென்னையை மட்டுமே மையமாகக் கொண்டு குவியும் முதலீட்டுக் கொள்கையைகைவிட்டு, அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய பரவலாக்கப்பட்ட புதிய வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி அரசு செயல்படுத்த வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

வியாசர்பாடி இளைஞர் கொலை வழக்கில் 3 பேர் கைது

சென்னை

வியாசர்பாடி உதயசூரியன் நகர் 13-வது பிளாக் பகுதியைச் சேர்ந்தவர் முருகேஷ் (24). இவர், வியாசர்பாடி சாமியார் தோட்டத்தில் உள்ள சித்தர் பீடம் சாமியார் மடம் பின்புறம் அமைந்துள்ள புதரில் ஜூலை 8-ம் தேதி கொலை செய்யப்பட்டு கிடந்தார்.

இதுகுறித்து வியாசர்பாடி போலீஸார் நடத்திய விசாரணையில் இந்த சம்பவத்தில் ஈடுபட்டது விக்னேஷ் (19), பிரேம்குமார் (19), ஜீவா (21) என்பது தெரியவந்தது.

இதையடுத்து 3 பேரையும் போலீஸார் நேற்று முன் தினம் கைது செய்தனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில், முருகேஷுக்கும், விக்னேஷுக்கும் இடையே முன் விரோதம் இருந்ததும், சம்பவத்தன்று முருகேஷ் சம்பவ இடத்தில் தனது நண்பர்களுடன் மது அருந்தியதும், அப்போது விக்னேஷ் தரப்பினர் வாய்த்தகராறில் ஈடுபட்டு கொலை செய்திருப்பதும் தெரியவந்தது. இது தொடர்பாக போலீஸார் மேலும் விசாரணை செய்து வருகின்றனர்.

அறுவை சிகிச்சைக்குப் பிறகு குணமடைந்த மேற்கு வங்க சிறுமி மற்றும் அவரது பெற்றோருடன் ஸ்ரீராமச்சந்திரா மருத்துவமனை மருத்துவக் குழுவினர்.

விபத்தில் இடுப்பு எலும்பு, சிறுநீர்ப்பை சேதமடைந்த

மேற்கு வங்க சிறுமிக்கு சிக்கலான அறுவை சிகிச்சை

போரூர் ஸ்ரீராமச்சந்திரா மருத்துவர்கள் சாதனை

சென்னை

சாலை விபத்தில் இடுப்பு எலும்பு, சிறுநீர்ப்பை சேதமடைந்த மேற்கு வங்க சிறுமிக்கு சென்னை ஸ்ரீராமச்சந்திரா மருத்துவமனை மருத்துவர்கள் சிக்கலான அறுவை சிகிச்சை மேற்கொண்டு, மறுவாழ்வு அளித்துள்ளனர்.

மேற்கு வங்க மாநிலம் வடக்கு தினாஜ்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் அலி. இவர் தனது மனைவி மற்றும் 4 வயது மகள் தாராவுடன் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) ஆட்டோவில் சென்ற போது, எதிரே வந்த லாரி மோதியதில் ஆட்டோ தலைகீழாக கவிழ்ந்தது. இந்த விபத்தில் சிறுமியின் கால்களில் எலும்பு முறிவு ஏற்பட்டது. இடுப்பு எலும்பு, சிறுநீர்ப்பை கடுமையாக சேதமடைந்தது.

அங்குள்ள மருத்துவமனையில் சிறுமிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால், சிறுநீர் வெளியேறாமல் தேங்கியதால், தற்காலிக ஏற்பாடாக, சிறுமியின் அடிவயிற்றில் குழாய் பொருத்தப்பட்டது. பல மாதங்களாக இவ்வாறு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இந்த சூழலில், உயிருக்கு ஆபத்தான நிலையில், மேல் சிகிச்சைக்காக சென்னை போரூரில் உள்ள ஸ்ரீராமச்சந்திரா உயர் கல்வி, ஆராய்ச்சி நிறுவன மருத்துவமனைக்கு சிறுமி அழைத்து வரப்பட்டார். அங்கு அவருக்கு பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

சிறுமியின் இடுப்பு பகுதி மிக குறுகலாக இருப்பதும், விபத்துக்கு பிறகு அங்கு மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை செய்வது சவாலானது என்றும் தெரிய வந்தது. தவிர, சேதமடைந்த சிறுநீர்ப்பை முழுவதுமாக மூடியிருந்தது. சிறுநீர் வெளியேறும் பாதையும் கடுமையாக சிதைந்திருந்தது.

இதையடுத்து, குழந்தைகளுக்கான சிறுநீரகவியல் துறை தலைவர் ரமேஷ் பாபு தலைமையிலான மருத்துவக் குழுவினர் 3 மணி நேரம் சிக்கலான அறுவை சிகிச்சை மேற்கொண்டனர். சிறுநீர்ப்பைக்கும், சிறுநீர் வெளியேறும் வழிக்கும் இடையே புதிய பாதையை உருவாக்கி, சிறுநீரைக் கட்டுப்படுத்தும் மென்மையான தசை நார்களுக்கு எந்த பாதிப்பும் இல்லாமல் மிக துல்லியமாக இணைத்தனர்.

அறுவை சிகிச்சைத் தழும்புகள் மறைய காலம் தேவைப்பட்டதால், 'மிட்ரோஃபானோஃப்' என்ற நவீன முறை மூலம் மாற்றுப் பாதையில் சிறுநீர் வெளியேற தற்காலிக வழி ஏற்படுத்தப்பட்டது. சிகிச்சை முடிந்து 15 நாட்களுக்குப் பிறகு எக்ஸ்-ரே எடுத்துப் பார்த்ததில், உள்உறுப்புகள் சரியாக இணைந்திருந்தன. இயல்பாக சிறுநீர் வெளியேறுவதும் உறுதி செய்யப்பட்டது. மகளின் உயிரைக் காப்பாற்றிய மருத்துவர்களுக்கு பெற்றோர் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்துள்ளனர்.

வகை பிரிக்கப்பட்ட கழிவுகளை மட்டுமே

தூய்மைப் பணியாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும்

மாநகராட்சி ஆணையர் ஜி.எஸ்.சமீரன் வேண்டுகோள்

சென்னை

சென்னை மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு ஏதுவாக, அனைத்து குடியிருப்புவாசிகள், வணிக நிறுவனங்கள், திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2026-ன்படி திடக்கழிவுகளை உருவாகும் இடத்திலேயே வகை பிரித்து தூய்மைப் பணியாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2026-ன்படி, உணவுக் கழிவுகள், காய்கறி மற்றும் பழத்தோல்கள், பூக்கள் மற்றும் பிற மக்கும் கழிவுகளை பச்சை நிற தொட்டியில் போட வேண்டும். காகிதம், பிளாஸ்டிக், உலோகம், அட்டைப்பெட்டிகள், துணி மற்றும் மறுசுழற்சி செய்யக்கூடிய மக்காத குப்பைகளை நீல நிற தொட்டியில் போட வேண்டும். பயன்படுத்தப்பட்ட சானிட்டரி நாப்கின்கள், டயப்பர்கள், பயன்படுத்தப்பட்ட மருத்துவக் கட்டுப் பொருட்கள் போன்ற சுகாதார கழிவுகளை பாதுகாப்பாக சுற்றி தனியாக சிவப்பு நிற தொட்டியில் போட வேண்டும். பேட்டரிகள், மின் விளக்குகள், டியூப் லைட்கள், மின்னணுக் கழிவுகள், காலாவதியான மருந்துகள், பெயிண்ட் டப்பாக்கள் உள்ளிட்ட வீட்டு அபாயகரக் கழிவுகளை தனியாக கருப்பு தொட்டியில் போட வேண்டும்.

தூய்மைப் பணியாளர் வரும்போது, அந்த வாகனத்தில் இந்த வண்ண தொட்டிகள் இருக்கும். இதன்மூலம் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றவும், மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களை மீட்டெடுக்கவும், குப்பைக் கிடங்குகளுக்கு அனுப்பப்படும் கழிவுகளின் அளவை குறைக்கவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்தவும் முடியும்.

எனவே, அனைவரும் வகை பிரிக்கப்பட்ட கழிவுகளை மட்டுமே மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும். விதிகளை மீறினால் அபராதம் மற்றும் பிற நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.